ஈரோடு மாவட்டம் கீழ்பவானி பிரதான கால்வாய் சீரமைப்பு நடவடிக்கை!

விவசாயப் பெருங்குடி மக்கள் ஒத்துழைக்க நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன் வேண்டுகோள்!

சென்னை, மே.31-

ஈரோடு மாவட்டம் கீழ்பவானி பிரதான கால்வாய் சீரமைத்தல் தொடர்பாக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் அறிக்கை வருமாறு :-

ஈரோடு மாவட்டம் கீழ்பவானி பிரதான கால்வாய் விரிவாக்குதல், புதுப்பித்தல் மற்றும் நவீனப்படுத்துதல் (ERM) திட்டத்திற்காக நபார்டு வங்கியின் மூலம் 709.60 கோடி ரூபாய் கடன் பெற்று பணிகள் துவங்குகின்ற நேரத்தில் விவசாயிகளில் ஒரு சாராரிடமிருந்து எதிர்ப்புகள் வந்தன.

அதாவது கால்வாயின் தரைப்பகுதியில் காங்க்ரீட் தளம் அமைத்து விட்டால் தண்ணீர் பூமியில் ஊறாது. கால்வாயின் அருகில் இருக்கின்ற விவசாயிகள் விவசாயத்திற்கும் குடிநீருக்கும் சிரமப்படுவார்கள். எனவே, தரையில் காங்க்ரீட் தளம் அமைக்கக் கூடாது என்று ஒரு சாரார் கேட்டுக் கொண்டார்கள். அரசு அந்த நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொண்டது.

கரைகள் மற்றும் கட்டுமானங்களைப் பொருத்தமட்டில் சுமார் 65 ஆண்டுகளுக்கு முன்னாள் கட்டப்பட்டவை. கால்வாய்கள் தொடர்ந்து பயன்பாட்டில் இருந்த

காரணத்தால் காலப்போக்கில் அவைகள் சிதைந்து, உடைந்து, பலமிழந்து போய் விட்டது. அன்று கரையில் வைக்கப்பட்ட மரங்கள் பெருமளவில் வளர்ந்து வேர்கள் மூலம் கரைகள் உடைவதற்கு காரணமாகி விட்டது. மதகுகள் மற்றும் மழைநீர் செல்லும் பாலங்கள் காலப்போக்கில் சிதைந்து போய் விட்டது.

பொய்ப் பிரச்சாரம்!

இவைகளையெல்லாம் சீரமைத்தால் தான் விவசாயத்திற்கு தண்ணீர் கடைமடைவரை தடையின்றிக் கிடைக்கும். ஆனால், பிரதான கால்வாயின் இருபுறங்களிலும் இருப்பவர்களுக்கு இதனால் பாதகம் ஏற்பட்டுவிடும் என்று சிலர் திட்டமிட்டு பொய் பிரச்சாரத்தை பரப்பிவிட்டார்கள்.

விவசாயிகள் மத்தியில் ஏற்பட்ட இத்தகைய ஐயத்தைப் போக்குவதற்காக, நீர்வளத்துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்கள். அமைச்சர் முத்துசாமி அவர்களும் பல முறை இந்த பிரச்சினையை பேசித் தீர்ப்பதற்கு அதிக காலம் செலவிட்டார். நானும், இரு தரப்பு விவசாயிகள் மத்தியில் பல முறை பேசி விளக்கி இருக்கிறேன்.

சேதமடைந்த மதகுகள்

நீண்ட இடைவெளிக்குப் பிறகு விவசாயிகள் மத்தியில் சற்றொப்ப ஒருமித்த கருத்துக்கள் உருவாகி இருப்பதை நான் வரவேற்கிறேன். இத்தகைய மனப்போக்கு தான் விவசாயத்தையே நம்பி இருக்கிற விவசாயிகளின் வாழ்வுக்கு உதவுவதாகும். எனவே, நின்று போயிருக்கிற பணிகளை மீண்டும் துவங்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டிருக்கிறேன்.

கால்வாயின் தரையில் எக்காரணம் கொண்டும் காங்க்ரீட் தளம் போடக்கூடாது என்றும், சேதமடைந்த மதகுகள் (Sluices) மற்றும் குறுக்கு கட்டுமானங்களை (Cross Masonry Structures) சீரமைத்திடவும், மிகவும் பலவீனமாக உள்ள கால்வாய் கரைப் பகுதிகளில் காங்க்ரீட் சுவர் அமைக்கவும் உத்தரவிட்டிருக்கிறேன்.

ஏற்கெனவே பல இடங்களில் கால்வாயில் உடைப்பு ஏற்பட்டன. இப்பணிகளை இப்போது செய்யாவிட்டால் கரைகளில் பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் பெருமளவில் வீணாகும் நிலை ஏற்படும் அபாயம் உள்ளது. மேலும், இந்தப் பணிகளைச் செய்வதன் காரணமாக கால்வாய் செல்லும் பகுதியில் குடிநீருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்றும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, இப்பணியை செய்து முடித்து கீழ்பவானி பிரதான கால்வாயை சீரமைத்திட விவசாய பெருங்குடி மக்கள் அரசுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தருமபுரி மாவட்டத்தில் கிடங்கில் நெல் இருப்பு குறித்து

ஆராயாமல் வசவுகளை அள்ளித் தெளிக்கிறார் பழனிசாமி!

உணவுத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி கண்டனம்!

சென்னை, மே.31-

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அறிக்கை வருமாறு :-

தர்மபுரி மாவட்டத்தில் வெற்றிலைக்காரன்பள்ளம் கிடங்கில் 22273 மெட்ரிக் டன் நெல் இருப்பு வைக்கப்பட்டிருந்தது. அதில் 7174 மெட்ரிக்டன் அரவைக்கு அனுப்பியது போக 15099 மெட்ரிக்டன் இருப்பு உள்ளது. இதிலிருந்து தான் 7000 டன் இருப்பில் இல்லை என்று இரு தரப்பினர் முரணாகக் கூறுவதாகக் கேள்விக்குறியுடன் செய்தி வந்ததைப் பார்த்தவுடனே தர்மபுரி மாவட்ட ஆட்சித்தலைவரையும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்

கழக மேலாண்மை இயக்குரையும் அந்தக் கிடங்கில் 100% தணிக்கை செய்து உண்மைத்தன்மையை அறிய ஏற்பாடு செய்திட ஆணையிட்டுள்ளேன்.

அதற்குள் அவசரப்பட்டு வெளிநாட்டு முதலீடுகளை உண்மையிலேயே ஈர்த்து வரும் நம் முதல்வர் அவர்கள் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவும் தன்னால் செய்ய முடியாத ஒன்றைச் செய்கிறாரே என்று பொறாமையின் உச்சகட்டத்தில் பத்திரிக்கையில் வந்த செய்தியை ஆராயாமல் வசவுகளை அள்ளித் தெளிக்கிறார் எடப்பாடி பழனிசாமி அவர்கள்.

தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்காது.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டத்தில் நீரில் மூழ்கி

உயிரிழந்த சிறுவர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மே 31-

சேலம் மாவட்டத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்த சிறுவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம், முனியப்பன் கோவில் காட்டுவளவு, விருத்தாசம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பரணிதரன், த/பெ. சுபாஷ் (வயது 15) மற்றும் கரட்டுப்பட்டிநங்கவள்ளி கிராமத்தைச் சேர்ந்த கிரித்திஷ், த/பெ.தங்கராசு (வயது 8) ஆகிய இரண்டு சிறுவர்களும் நேற்று (30-5-2023) விருத்தாசம்பட்டி கிராமம், முனியப்பன் கோவில் காட்டூர் ஏரியில் குளிக்கச் சென்ற போது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

சென்னை தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம்!

மாவட்ட செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னைத் தெற்கு மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம் இன்று (31.05.2023 புதன்கிழமை) மாலை 05. 00 மணி அளவில், சைதை பஜார் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் தொகுதிக்குட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி மற்றும் ஒன்றியக்கழக செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் இளைஞரணி மாவட்டத் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்: முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

.

அமைச்சர் மா.சுப்பிரமணியன்
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்றக் கூட்டம் மேயர் ஆர்.பிரியா தலைமையில் நேற்று (30.05.2023) ரிப்பன் கட்டட மாமன்றக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. இராதாகிருஷ்ணன், , நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தேனி மாவட்டத்தில் 'அரிகொம்பன்' காட்டு யானையின் நடமாட்டம்!

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு நடவடிக்கை!

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் விளக்கம்!

சென்னை, மே 31-

தேனி மாவட்டத்தில் "அரிகொம்பன்"காட்டு யானையின் நடமாட்டம் குறித்து அரசு சார்பில் - சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கேரள உயர் நீதிமன்றம், ஆணையின்படி, 35 வயது ஆண் யானையான "அரிகொம்பன்" ஐ பிடித்து வேறு இடத்திற்கு மாற்ற உத்தரவு பிறப்பித்தது. அதன்படி கேரள வனத்துறையினர் நடவடிக்கை எடுத்து இந்த யானையை கடந்த ஏப்ரல் 29-ஆம் தேதி பெரியாறு புலிகள் காப்பக வனப்பகுதியில் கேரள தமிழக எல்லையில் விடுவித்தனர்.

"அரிக்கொம்பன்" காட்டு யானையின் நடமாட்டத்தைக் கண்காணிக்க தமிழ்நாடு அரசு பல துறைகளுடன் ஒருங்கிணைந்து துரித நடவடிக்கை எடுத்து வருகிறது. கள இயக்குநர் மற்றும் தலைமை வனப் பாதுகாவலர், ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம் அவர்களின் தலைமையில் மேகமலை கோட்டத்தின் துணை இயக்குநர், தேனி மாவட்ட வன அலுவலர் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்ட துணை இயக்குனர்; மேகமலை கோட்டத்தின் உதவி வனப் பாதுகாவலர் மற்றும் துணை வனப் பாதுகாவலர் ஆகியோர் கொண்ட ஒரு குழுவை அரசு அமைத்துள்ளது. மதுரை வனப் பாதுகாப்புப் படையின் மூலம் வனப்பகுதிக்குள் யானைகளை இடமாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகத்தின் உள்ளூர் யானை கண்காணிப்பாளர்கள் உட்பட முதுமலை மற்றும் ஆனைமலை புலிகள் காப்பகத்தை சேர்ந்த 16 யானைத்தட கண்காணிப்புக் காவலர்கள் ரேடியோ காலர் பொருத்தப்பட்ட இந்த யானையின் நடமாட்டத்தைக் கண்காணித்து வருகின்றனர்.

டாப்சிலிப் யானைகள் முகாமில் இருந்து 'சுயம்பு' மற்றும் 'முத்து' மற்றும் முதுமலை யானைகள் முகாமில் இருந்து 'உதயன்' ஆகிய 3 கும்கி யானைகள் சம்பவ இடத்துக்கு வந்து மேற்படி நடவடிக்கைகளுக்குத் துணை நிற்கின்றன.

யானைகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்க இரண்டு பிரிவுகளாகச் செயல்பட திருவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம் கள இயக்குநர், நான்கு முக்கிய குழுக்களை அமைத்துள்ளார். தளவாடங்கள், கும்கிகளைக் கையாளுதல், தரவுகளைத் திரட்டுதல் மற்றும் இதர தேவைகளுக்குத் தனிக் குழுக்கள் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றன. மின்சாரம் தாக்காமல் இருக்க, யானைகள் பாதுகாப்பாகச் செல்வதை தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பிரத்யேகக் குழு கண்காணித்து வருகிறது.

ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பை உறுதி செய்வதற்காக கம்பம் வன சரக அலுவலக வளாகத்தில் மத்திய கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் இருந்து மொத்தம் 160 வனத்துறை அலுவலர்களும், ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டம், ஆனைமலை புலிகள் காப்பகம், முதுமலை புலிகள் காப்பகம், ஓசூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளில் இருந்து 31 வனத்துறையினரும் களத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கம்பம் நகராட்சிப் பகுதியில் 144 தடை உத்தரவு மூலம் சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்படுகிறது. தேனி மாவட்ட ஆட்சியர் நிலைமையை உன்னிப்பாக கண்காணித்து வருகிறார். யானையின் பாதுகாப்பை உறுதி செய்யும் அதே வேளையில் பொதுமக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளும் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அவர் தனது விளக்க அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை, கட்டடம் (க & ப) வட்டம், சேப்பாக்கம், சென்னை-5

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண் : 04 கட்டட (க & ப) வட்டம் 2023-2024 / நாள். 23.05.2023
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை : மொத்த வகை /இரு உறை முறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட (க (ம) ப) வட்டம் சென்னை-5 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.

வ.எண்	பணியின் பெயர் மற்றும் முன்வைப்புத் தொகை	பணியின் தோராய மதிப்பீட்டுத் தொகை	காலம்	பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் தகுந்த வகுப்பு
1.	இரு உறை முறை சென்னை மாவட்டம், பெரம்பூரில் புதிய தாலுக்கா அலுவலகக் கட்டடம் கட்டும் பணி. மு.வை.தொகை: ரூ.3,67,500/-	ரூ.714.30 இலட்சங்கள்	10 மாதங்கள்	வகுப்பு II

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in/ என்ற இணையதள முகவரியை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 04.07.2023 மாலை 03.00 மணி வரை
3. ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்: 04.07.2023 மாலை 04.00 மணி

செ.ம.தொ.கி / 2774 / ஒப்பந்தப்புள்ளி /2023

கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டடம் (க.ட.டு மானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேப்பாக்கம், சென்னை -5

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

GREATER CHENNAI CORPORATION
SPECIAL PROJECTS DEPARTMENT

S.P.D.C.No B1/0434/2022 **e - Re - TENDER NOTICE**

e - Re - Tender are invited for the following work in Two Cover System as per details furnished below.

S.P.D.C.No.B1/0434/2022:- Hiring a Firm for supply of Environmental Expert - 1 No. and Social Expert - 1 No. for Greater Chennai Corporation for a period of 1 year - Submission of E.M.D. Rs.43,000/-

Tender document will be available in website	:	https://tntenders.gov.in
Tender last date and time of submission	:	15.06.2023 upto 3.00 p.m.
Tender opening date and time	:	16.06.2023 at 3.00 p.m

DIPR / 2789 / Tender / 2023

Superintending Engineer (Special Projects)

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா!

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் - தொடர் பொதுக்கூட்டங்கள் - நலத்திட்ட உதவிகள்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

தமிழகத்திற்கும் கழகத்திற்கும் கவசமாய் திகழ்ந்து மறைந்தும் மறையாமல் நம் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவையொட்டி அவர் தமிழினத்திற்காகவும் – தமிழ்நாட்டு மக்களுக்காவும் ஆற்றிய அரும்பெரும் சாதனைகளை விளக்கியும் – தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்று மக்கள் மனம் மகிழும் வகையில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி ஈராண்டு ஆட்சியில் எண்ணிலடங்கா திட்டப் பணிகளை நிறைவேற்றி சாதனை படைத்த தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான மக்கள் நலன் காக்கும் கழக அரசின் இரண்டு ஆண்டு சாதனைகளை விளக்கியும்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் வருகிற ஜூன் 1ஆம் தேதி முதல் ஜூன் 30ஆம் தேதி வரை, ஜூன் மாதம் முழுவதும் கீழ்க்கண்ட தேதிகளில், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி – ஒன்றிய – நகர பேரூர்களில் கீழ்க்காணும் சிறப்பு பேச்சாளர்களைக் கொண்டு தொடர் பொதுக்கூட்டங்கள், வாழ்த்தரங்கம், இன்னிசை பாட்டரங்கம் மற்றும் சிறப்பு பட்டிமன்றங்கள் மிகச் சிறப்பான முறையில் நடைபெற உள்ளது.

அந்தந்த பகுதி ஒன்றிய நகர பேரூர்களில் பொதுக்கூட்டம், வாழ்த்தரங்கம், இன்னிசை பாட்டரங்கம் மற்றும் சிறப்பு பட்டிமன்றங்கள் நடைபெறும் போது, அக்கூட்ட மேடையிலேயே ஏழை எளியவர்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட உள்ளது.

நாள்	உரையாற்றும் பேச்சாளர்	பகுதி /ஒன்றியம் / நகரம் /பேரூர்
1.6.2023 வியாழன்	திண்டுக்கல் ஐ.லியோனி	செம்பாக்கம் வடக்கு பகுதி
2.6.2023 வெள்ளி	**வாழ்த்தரங்கம் – "காலத்தை வென்ற கலைஞர் ஒரு பல்கைலைக்கழகம்"** முத்தமிழறிஞர் கலைஞரின் **"நகைச்சுவை நலம்"** - புலவர் தா. இராமலிங்கம் **"தமிழ்சுவை நலம்"** - சுந்தர ஆவுடையப்பன் **"சமூக நலம்"** - கவிஞர் சிவகுருநாதன் **"மகளிர் நலம்"** - முனைவர் வேதநாயகி	குன்றத்தூர் நகரம்
4.6.2023 ஞாயிறு	கோவி.செழியன்	திருப்போரூர் வடக்கு ஒன்றியம்
5.6.2023 திங்கள்	ஆர்.எஸ். பாரதி	பம்மல் தெற்கு பகுதி
6.6.2023 செவ்வாய்	திண்டுக்கல் லியோனி	குன்றத்தூர் தெற்கு ஒன்றியம்
7.6.2023 புதன்	முனைவர் சபாபதி மோகன்	புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியம்
8.6.2023 வியாழன்	**வாழ்த்தரங்கம்** பீட்டர் அல்போன்ஸ் - முனைவர் சபாபதி மோகன்	குன்றத்தூர் வடக்கு ஒன்றியம்
9.6.2023 வெள்ளி	ஈரோடு இறைவன்	திருப்பெரும்புதூர் பேரூர்
10.6.2023 சனி	கம்பம் செல்வேந்திரன்	செங்கல்பட்டு நகரம்
11.6.2022 ஞாயிறு	சிறப்பு கவியரங்கம் தலைமை கவிஞர் விவேகா	பல்லாவரம் வடக்கு - தெற்கு பகுதி
12.6.2023 திங்கள்	ஆ.ராசா	மறைமலைநகர் நகரம்
13.6.2023 செவ்வாய்	**சிறப்பு பட்டிமன்றம்** **காலத்தை வென்ற கலைஞர் அவர்களின் நிலைத்த புகழுக்கு பெரிதும் காரணம் மொழி உணர்வா ? கடமை உணர்வா ?** **நடுவர் –** புலவர் த. ராமலிங்கம் **பங்கேற்போர்** - திருச்சி மாது, முனைவர் அஞ்சலி முனைவர் விஜயகுமார், கவிஞர் தாமரைக்கனி **சிறப்புரை** டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்	பம்மல் வடக்கு பகுதி
14.6.2023 புதன்	திரை இசை பாடகர்கள் பங்கேற்கும் பாட்டிசை பட்டிமன்றம்	ஆலந்தூர் தெற்கு பகுதி
16.6.2023 வெள்ளி	ராஜீவ்காந்தி சேப்பாக்கம் பிரபாகரன்	காட்டாங்கொளத்தூர் தெற்கு ஒன்றியம்
17.6.2023 சனி	கவிஞர் தமிழ்தாசன்	திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம்
	ஆரணி மாலா	மாமல்லபுரம் நகரம்
18.6.2023 ஞாயிறு	சைதை சாதிக் செங்கை தாமஸ்	திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம்
19.6.2023 திங்கள்	தமிழன் பிரசன்னா ஆடுதுறை உத்திராபதி	நந்திவரம் - கூடுவாஞ்சேரி நகரம்
21.6.2023 புதன்	திண்டுக்கல் ஐ. லியோனி	திருக்கழுக்குன்றம் பேரூர்
22.6.2023 வியாழன்	தூத்துக்குடி சரத்பாலா சென்னை அரங்கநாதன்	திருப்போரூர் பேரூர்
23.6.2023 வெள்ளி	ஆடுதுறை உத்திராபதி	கண்டோன்மென்ட் நகரம்
24.6.2023 சனி	சுப.வீர பாண்டியன்	செம்பாக்கம் தெற்கு பகுதி
25.6.2023 ஞாயிறு	பரிதி இளம்சுருதி பவானி கண்ணன்	திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம்
26.6.2023 திங்கள்	கரூர் முரளி தக்கோலம் தேவபாலன்	பெருங்களத்தூர் தெற்கு பகுதி
27.6.2023 செவ்வாய்	புதுக்கோட்டை விஜயா	தாம்பரம் கிழக்கு பகுதி
28.6.2023 புதன்	சேலம் சுஜாதா குடியாத்தம் புவியரசி	காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றியம்
29.6.2023 வியாழன்	கவிஞர் நன்மாறன் ஆரணி மாலா	ஆலந்தூர் வடக்கு பகுதி
30.6.2023 வெள்ளி	நெல்லிகுப்பம் புகழேந்தி செங்கை சந்தானம்	திருப்போரூர் தெற்கு ஒன்றியம்

எனவே, அந்தந்த பகுதி ஒன்றிய – நகர பேரூர் செயலாளர்கள் மேற்கண்ட தேதிகளில் இத்தொடர் பொதுக்கூட்டம் மற்றும் நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை சிறப்பான முறையில் செய்து இக்கூட்டத்திற்கான அழைப்பிதழை முறையாக அச்சிட்டு, அந்தந்த பகுதி ஒன்றிய – நகர பேரூர்களில் அடங்கி உள்ள நிர்வாகிகள் அனைவருக்கும் தந்து அவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்து, நிகழ்ச்சிகளை சிறப்பான முறையில் எழுச்சியோடு நடத்தி, ஏழை எளிய மக்களுக்கு நலதிட்ட உதவிகளை இக்கூட்ட மேடையிலேயே வழங்கிடவும் ஏற்பாடு செய்திடும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன்
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

ஆவின் நிறுவன கட்டுப்பாட்டிலுள்ள பால் பதன பிரிவு, பால் உப பொருட்கள் உற்பத்தி மற்றும் தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு பணிகளை மேம்படுத்துவது குறித்த கலந்தாய்வுக்கூட்டம் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில் நேற்று (30.05.2023) தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களின் பால் பதம் மற்றும் தர உறுதி பிரிவுகளுக்கான ஆய்வுக்கூட்டம் சென்னை, நந்தனம் ஆவின் இல்லத்தில் நடைபெற்றது. இதில் துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர்.